*புதுச்சேரி அரசு*
*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **20 ஜூலை, 2021**

## <u>பத்திரிகை செய்தி</u>

புதுச்சேரி, சுகாதாரத் துறை பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரியுடன் இணைந்து ஜூலை 19 முதல் 23 வரை நான்கு நாட்களுக்கு ஏற்பாடு செய்துள்ள கொரோனா தடுப்பூசி முகாமின் இரண்டாவது நாளான இன்று(20-07-2021) தடுப்பூசி முகாமினை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தொடங்கி வைத்தார்.

முன்னதாக, தேசிய மாணவர்ப்படையின் அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்கப்பட்ட துணைநிலை ஆளுநர் கல்லூரியில் உள்ள பாரதிதாசன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு பிரகாஷ் குமார், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் மோகன் குமார், கல்லூரி முதல்வர் டாக்டர் ராஜி சுகுமார் ஆகியோர் உடனிருந்தனர். பேராசிரியர்கள், கல்லூரி மாணவிகள், அலுவலக ஊழியர்கள் அவர்களது குடும்பத்தினருக்கு இந்த முகாமில் தடுப்பூசி செலுத்தப்படுகிறது.